அவசரம் //தனிகவனம்//

அனுப்புநர்
திருமதி. சி.பேபி இந்திரா..,
மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்,
வேலூர் - 632 009.

பெறுநர்
1. மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்,
வேலூர்.
2. மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்,
திருப்பத்தூர்.
3. மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்,
இராணிப்பேட்டை.

ந.க.எண்: என்.4/3461/2021 நாள்: 21.12.2021.

அய்யா/அம்மையீர்,

பொருள்: சிறுபான்மையினர் நலம் - பள்ளி படிப்பு, பள்ளி மேற்படிப்பு மற்றும் தகுதி (ம) வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகைத் திட்டம் 2021-2022 ஆம் ஆண்டு - உதவித்தொகை பெற விண்ணப்பித்திருந்த மாணவ/மாணவிகளில் ஆதார் அட்டை இணைக்கப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் போலியான விண்ணப்பங்கள் குறித்து காணொளி மூலம் நடைபெறும் இயக்குநரின் ஆலோசனை கூட்டம் நடைப்பெற்றது – தொடர்பாக

பார்வை: 1. இயக்குநர், சிறுபான்மையினர் நலத்துறை அவர்களின் கடித எண்: பி1/2907/2021, நாள்: 16.11.2021 மற்றும் 27.11.2021.
2. இயக்குநர், சிறுபான்மையினர் நலத்துறை அவர்களின் காணொளிக்காட்சி ஆய்வுக்கூட்டம், நாள்: 21.12.2021.

********

பார்வை (2)-இல் காணும் சிறுபான்மையினர் நல இயக்குநர் அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் 2021-2022 ஆம் ஆண்டு பள்ளிப்படிப்பு, பள்ளி மேற்படிப்பு மற்றும் தகுதி (ம) வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் மாணவர்கள் புதியது மற்றும் புதுப்பித்தல் கல்வி உதவித்தொகை பெற சிறுபான்மையினர் மாணவ/மாணவியர்களின் மூலம் தேசிய கல்வி உதவித்தொகை இணையத்தில் (NSP) விண்ணப்பித்துள்ளனர். அவைகளில் ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டத்தில் (திருப்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டை உள்பட) 6,783 விண்ணப்பங்கள் நாளது தேதிவரை சரிப்பார்த்து DNO LOGIN –ற்கு Forward செய்யப்படாமல் உள்ளன எனவும் இதற்கு தொடர்புடைய முதன்மைக்கல்வி அலுவலர்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்ளாததே காரணம். என இயக்குநர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

எனவே, மேற்படி நிலுவையில் உள்ள விண்ணப்பங்களை தொடர்புடைய வேலூர், திருப்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்கள் தங்கள் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தக்க அறிவுரைகளை வழங்கி 23.12.2021 தேதிக்குள் சரிப்பார்த்து Forward செய்ய அறிவுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இணைப்பு: பட்டியல்(இ-மெயில் மூலமாக)

தங்கள் உண்மையுள்ள,

21/12/2021

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்,
வேலூர்.

21/12/21

நகல்:
1. மாவட்ட ஆட்சித்தலைவர், வேலூர்
2. இயக்குநர், சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை } தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
3. திருப்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்கள் - தொடர் நடவடிக்கைக்காக.